செ.வெ.எண்.48 நாள்:22.10.2020

# நீலகிரி மாவட்டம் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ. 57.50 மதிப்பில் நடைபெற்ற பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---

நீலகிரி மாவட்டம் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.57.50 மதிப்பில் நடைபெற்ற பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அம்மைகுளம் அங்கன்வாடி மையத்தில் மாநில பேரிடர் மறுமொழி நிதி திட்டத்தின்கீழ் ரூ.2 இலட்சம் மதிப்பில் பராமரிப்பு பணியினையும், கீழ்நாடுகாணி ஆதிதிராவிடர் காலனி பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.3 இலட்சம் மதிப்பில் நடைபெற்ற தடுப்புச்சுவர் பணியினையும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கத்திமட்டம் அங்கன்வாடி மைய கட்டடத்தினையும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.6 இலட்சம் மதிப்பில் பந்தலூர் முருகன் கோவில் பகுதியில் நடைபெற்ற குடிநீர் குழாய் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.6 இலட்சம் மதிப்பில் நெல்லியாளம் முதல் தொழிலாளர் குடியிருப்பு பகுதி வரை கான்கிரீட் சாலை பணியினையும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.5 இலட்சம் மதிப்பில் மாங்கோரேஞ்ச் முதல் கொளப்பள்ளி வரை கழிவுநீர் கால்வாய் பணியினையும், கொளப்பள்ளி முதல் உப்பட்டி சாலை வரை ரூ.7 இலட்சம் மதிப்பில் தடுப்புச்சுவர் பணியினையும், ஓலிமாடா பிரபா வீடு அருகில் ரூ.7 இலட்சம் மதிப்பில் தடுப்புசுவர் பணியினையும், ரூ.5 இலட்சம் மதிப்பில் சாலகுன்னா சர்ச் சாலை பணியினையும்,

பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.6.50 இலட்சம் மதிப்பில் பொன்னம்மா பாலம் ஆதிவாசி குடியிருப்பு பகுதி சாலை பணியினையும், என மொத்தம் ரூ.57.50 இலட்சம் மதிப்பில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப.அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்வின் போது கூடலூர் கோட்டாட்சியர் திரு.ராஜ்குமார், நெல்லியாளம் நகராட்சி ஆணையாளர் (பொ) திரு.வெங்கடாச்சலம் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.